I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
OS.NO.89/2019(c/w.100/2019,112/2019)

**Name** : Murugan
**Father/Husband Name** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.02.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் : 04.30 p.m

04.09.2024 அன்று ஒருதலைபட்சமாக விசாரிக்கப்பட்ட சாட்சியில் நிரூபண பிரமாண வாக்குமூலத்தையே தற்போது இரு தரப்பினரும் தோன்றி விசாரணை நடக்கும் நிலையில், அதையே முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள மெமோ தாக்கல் செய்யப்பட்டு அதே சத்திய பிரமாண வாக்குமூலத்தை ஏற்று கொள்ள அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

முதல் விசாரணை

நான் ஏற்கனவே 04.09.2024 ல் சாட்சியம் அளித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். பிரமாண வாக்குமூலத்திலுள்ள விவரம் எனக்கு தெரியும். நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டு தான் கையொப்பம் செய்தேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் உண்மையென்று உறுதியளிக்கிறேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

நான் ஏற்கனவே சாட்சியம் அளிக்க வந்தபோது நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை. இன்று சாட்சியம் அளிக்கவும் அழைப்பாணை

வரவில்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வராத நிலையில் ஏன் என்னை பிரதிவாதி அழைத்து வந்தார் என்று கேட்டேனா என்றால் வாதி அழைத்ததின் பேரில் நான் வந்தேன். வாதி என்னை சாட்சியம் அளிக்க வரும்படி சொன்னாரா என்றால் வாதி சாட்சி கையெழுத்து போட்டது பற்றி நீதிமன்றத்தில் வந்து சொல்லுங்கள் என்று சொன்னார். அழைப்பாணை வந்தால் தான் வருவேன் என்று நான் சொல்லவில்லை, அவர் அழைத்ததால் நான் வந்தேன். வாதி சொக்கலிங்கத்திற்கு சாட்சியம் அளிக்க குடியாத்தம் நீதிமன்றத்திற்கு வந்தேனா என்றால் வந்தேன். அந்த நீதிமன்றத்தில் சம்மன் பெறாமல் வந்தது குறித்து கேள்வி கேட்டேனா என்றால் கேட்டீர்கள். அதை வைத்து இந்நீதிமன்றத்தில் எனக்கு சம்மன் வராததால் வர மாட்டேன் என்று வாதியிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி என்றைக்கு என்னை அழைத்தார் என்றால் 11 ஆம் தேதி காலையில் அழைத்தார். 9 ஆம் தேதி காலை நீதிமன்றத்திற்கு வந்தேனா என்றால் வரவில்லை. நான் 9 ஆம் தேதி நீதிமன்றத்திற்கு வந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

நான் ஏற்கனவே முதல் விசாரணை தாக்கல் செய்யப்பட்டபோது வாதி என்னை எப்போது அழைத்தார் என்றால் 12.08.2024 ல் வந்து அழைத்தார். அன்றைக்கு வந்து நீதிமன்றத்தில் சாட்சி சொன்னேனா என்றால் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலம் நான் சொல்லி தான் என் வழக்கறிஞர் அலுவலகத்தில் தான் அவர் பேப்பரில் எழுதி கொண்டு அதன் பிறகு 12.08.2024 அன்று நான் நீதிமன்றத்திற்கு வந்த பிறகு அந்த வாக்குமூலத்தை என்னிடம் கொடுத்தார், அதை நான் படித்து பார்த்து அதன் பிறகு 12.08.2024 ல் கையெழுத்து போட்டேன். 12 ஆம் தேதிக்கு 2 நாட்களுக்கு முன்னதாக வழக்கறிஞர் அலுவலகத்திற்கு போனேன். நான் 12 ஆம் வாதி என்னை அழைத்ததாக மேலே சொல்லியுள்ள சாட்சியம் சரியா தவறா என்றால் வாதி அழைத்தது 12 ஆம் தேதி காலையில், ஆனால் வழக்கறிஞர் முதலில் அழைத்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

மொத்தம் 3 பக்கங்கள் டைப் செய்யப்பட்டிருந்தது. வாதி பிரதிவாதிக்கு பணம் கொடுத்ததை பார்த்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில் எந்த தேதியில் பணம் கொடுத்தார் என்றால் 19.04.2018. வியாபாரம் நிமித்தமாக அவர் பணம் கேட்டார் என்று என்னிடம் சொன்னார். எதற்காக பணம் வாங்கினார் என்று என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. அதேபோல் என்னை யார் அழைத்ததன் பேரில் நான் கையெழுத்து போட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல, 3 வது பக்கத்தில் ஜெயசங்கர் அழைத்ததின் பேரில் தான் வாதி வீட்டிற்கு போனதாக சொல்லியுள்ளேன்.

நான் முதலில் forest guard ஆக இருந்தேன். பின்னர் forester ஆக பணி ஓய்வு பெற்றேன். வாதி சொக்கலிங்கத்திடம் 20 வருடம் வேலை செய்தேனா என்றால் இல்லை ஆனால் அவரை தெரியும். நான் அவரிடம் 2 வருடங்களான guard ஆக வேலை செய்தேன். குடியாத்தம் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ளது உண்மை என்றால் அது சம்மந்தமாக சொல்லியுள்ளேன். அந்த நீதிமன்றத்தில் நான் guard ஆக வேலை பார்த்தது உண்மை என்று சொல்லியுள்ளேன்.

குடியாத்தம் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தபோது குறுக்கு விசாரணையில் " நானும் பூபதியும் ஒரே துறையில் பணியாற்றினோம் என்றால் சரிதான். நான் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் guard ஆகவும் forester ஆகவும் சொக்கலிங்கத்தின் கீழ் வேலை செய்தேன் என்றால் சரிதான் " என்று சொல்லியுள்ளேன் என்றும் "எனக்கு சொக்கலிங்கம் துறை அதிகாரி மற்றும் நண்பர் என்றால் சரிதான், நாங்கள் இருவரும் ஒரே ஊரில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான்" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

அந்த நீதிமன்றத்தில் 15 வருடங்கள் வேலை செய்ததாக சொல்லவிட்டு இங்கு 2 வருடம் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சொக்கலிங்கம் எனக்கு தெரியுமே தவிர அவரிடம் நான் guard ஆக வேலை செய்தது 2 வருடம் மட்டும் தான். அதன் பிறகு வேறு அதிகாரியிடம் வேலை செய்தேன்.

நான் தற்போது சொல்வது பொய்யாக சங்கதிகள் என்றால் சரியல்ல. என்னுடைய நண்பரும் உயர் அதிகாரியுமான சொக்கலிங்கத்தை காப்பாற்ற , நாங்கள் அனைவரும் சேர்ந்து பொய்யாக உருவாக்கிய புரோநோட்டிற்கு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 4 பிள்ளைகள். அவர்கள் பிறந்த தேதிகள் தெரியாது.

நான் பணம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ள நிலையில் புரோநோட்டை நீதிமன்றத்தில் எடுத்து பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. இன்றைய தேதி நான் நீதிமன்றத்தில் பார்க்கவில்லை என்றால் சரிதான், நான் கையெழுத்து போடும்போது பார்த்தேன். நீதிமன்றத்தில் உள்ள புரோநோட்டை என்னிடம் காட்டியிருந்தால் தான் அது என்னுடைய கையெழுத்து என்று என்னால் சொல்ல முடியும் என்றால் பார்த்தால் சொல்ல முடியும் என்றால் சரிதான்.

தாவாவில் உள்ள புரோநோட்டை பார்க்காமல் சாட்சியம் அளிப்பது ஏற்று கொள்ளத்தக்கதல்ல என்றாலும் நிராகரிக்கத்தக்கது என்றால் சரியல்ல. புரோநோட்டை என்னிடம் காட்டி சாட்சியம் அளித்திருந்தால் தான் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் சரி என்றால் அப்படி சொல்வது சரியல்ல.

19.04.2018 அன்று என்ன கிழமை என்றால் நினைவில்லை. பாண்டில் எதற்காக கடன் வாங்கினார் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் தொழில் ரீதியாக வியாபார ரீதியாக என்று தான் எழுதியிருக்கும். என்ன காரணத்திற்காக கடன் என்று அதில் எழுதப்பட்டுள்ளதா என்றால் அதில் அப்படி எழுத மாட்டார்கள்.

என்ன காரணத்திற்காக கடன் வாங்கினார் என்ற விவரம் பாண்டில் எழுதப்படவில்லை என்றால் தொழிலுக்காக வாங்கினார். அப்படி என்று பாண்டில் எழுதப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதற்காக கடன் பெற்றார் என்ற விவரம் எழுதப்படவில்லை என்றால் சரிதான்.

19.04.2018 அன்று காலை 11.00 மணிக்கு கடன் வழங்கப்பட்டது. பாண்டு எழுதியது தியாகராஜன். அது பிரிண்டட் பாண்டு தான். கையால் எதுவும் எழுதப்படவில்லை. பில்லப் செய்வதில் தான் கையில் எழுதப்பட்டது. என்னை

யார் என்று தெரியாது என்று பிரதிவாதி சொல்கிறார் என்றால் சரியல்ல. ஜெயசங்கர் குடியாதத்ததை சேர்ந்தவர். சாட்சி சொல்கிறார் தியாகராஜன் என்பவர் குடியாத்தம் என்றும் அவர் பத்திரம் எழுதுபவர் என்றும் அவரை வைத்து தான் பாண்டு எழுதப்பட்டது என்று சொல்கிறார்.

தியாகராஜன் என்பவர் எங்கு இருக்கிறார் என்றால் அவரை தெரியும், அவர் எனக்கு பழக்கம் ஆனால் தற்போது அவர் எந்த முகவரியில் இருக்கிறார் என்று தெரியாது. தியாகராஜன் என்ற பெயரில் குடியாத்தத்தில் யாரும் பத்திரம் எழுதுபவர் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு உண்மையாக இருந்திருந்தால் அவர் விலாசத்தை தெரிவித்திருப்பேன் என்றாலும் சரியல்ல.

நான் 11.00 மணிக்கு போனேன் என்றால் சரிதான். யார் சொல்லி பிரிண்டட் பாண்டு எழுதினார்கள் என்றால் ஜெயசங்கர் சொல்லி தான் எழுதப்பட்டது. ஜெயசங்கர் அங்கு வரவே இல்லை என்றால் சரியல்ல. பணம் எதுவும் பெறவில்லை என்றாலும் அவர் கையெழுத்து போடவில்லை என்றாலும் அவர் எதுவும் சொல்லவில்லை என்றாலும் பாண்டு அன்றைய தேதியில் எழுதப்படவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சி சொலகிறார் ஜெயசங்கர் பணம் கொடுத்தது, நான் சாட்சி கையெழுத்து போட்டது உண்மை. ரூ.5,00,000 கொடுத்தார். ரூ.500, ரூ.200 தாள்கள் ஆகும். அவ்வாறு என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. எத்தனை 500, 200, 100 தாள்கள் கொடுத்தார் என்றால் பணம் கொடுத்தது தான் தெரியும். நான் எண்ணி பார்க்கவில்லை அதனால் எனக்கு தெரியாது. எண்ணி பார்த்தவர்களுக்கு தான் தெரியும்.

நான் எத்தனை கட்டு கொடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. எது எது எத்தனை கட்டு இருந்தது என்று எண்ணி பார்த்தவர்களுக்கு தான் தெரியும். அந்த பணத்தை சொக்கலிங்கம் வீட்டிலிருந்து எடுத்து வந்து கொடுத்தார். பணம் கொடுக்கும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் நான், விஜயன்(சாட்சி), வாதி, தியாகராஜன், ஜெயசங்கர் ஆகியோர்கள் இருந்தோம்.

மேற்படி எங்களை தவிர வேறு யாரும் இல்லை.

11.00 மணியிலிருந்து 12.30 மணிக்குள் பணம் கொடுத்து எல்லாம் முடிந்துவிட்டது. குறிப்பாக பாண்டு எழுதி முடிக்கப்பட்டது எத்தனை மணிக்கு பணம் கொடுக்கப்பட்டது என்றால் நாங்கள் 11.00 மணிக்கு போனோம். பாண்டு தயார் செய்து 12.00 மணிக்கு கையெழுத்து போட்ட பிறகு வாதி வீட்டிற்குள் போய் பணம் கொண்டுவந்து ஸ்டூல் மேல் வைத்தார். அதை பிரதிவாதி எண்ணி பார்த்தார். பாண்டில் வில்லை மேல் ஒரு கையெழுத்தும் கீழ் ஒன்றும் போட்டார், அதை நானும் 2 வது சாட்சியாகிய விஜயனும் பாண்டு எழுதிய தியாகராஜன் என்பவரும் பார்த்தோம் என்று சாட்சி சொல்கிறார்.

மேலே சாட்சியத்தில் கையெழுத்து போட்ட பிறகு தான் வாதி வீட்டிலிருந்து வீட்டிற்குள்ளே போய் பணம் எடுத்து வந்தார் என்று சொல்லிவிட்டு அதன் பிறகு வில்லை மேல் கையெழுத்து போட்டதாக சொல்வது முற்றிலும் மாறுப்பட்ட சாட்சியாகும் என்றால் தவறு. (வாதி தரப்பில் இந்த கேள்வி வராது என்று கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது)

பாண்டு எவ்வளவு பெரிய ஷீட் என்றால் பாண்டு அரை பேப்பர் அளவிற்கு இருந்தது. எத்தனை ரூபாய் வில்லை ஒட்டப்பட்டிருந்தது என்றால் நினைவில்லை. இந்த சம்பவம் உண்மையிலேயே நடைபெறவில்லை என்றாலும் நடந்திருந்தால் ஒரு பாண்டு எழுதுவதற்கு 1.30 மணிநேரம் ஆகாது என்றாலும் எத்தனை ரூபாய் வில்லை என்பது தெரிந்திருக்கும் என்றாலும் சரியல்ல.

நானும் வாதியும் மற்ற சாட்சிகளும் வாதியின் நண்பர் என்ற முறையில் கூட்டு சதி செய்து பிரதிவாதிகளிடமிருந்து பணம் அபகரிக்க போர்ஜரி கையெழுத்து போட்டு தாவா பாண்டை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. ஜெயசங்கர் உண்மையில் கையெழுத்து எதுவும் போடவில்லை என்றாலும் பணம் எதுவும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல. எந்த இங்க்கினால் பாண்டு எழுதப்பட்டது என்றால் அவர்கள் பேனாவில் எழுதப்பட்டது. என்னுடைய இங்க்

புளூ. தியாகராஜன் அவர் பேனாவில் எழுதினார். அதன் இங்க் என்ன கலர் என்று நினைவில்லை. சாட்சிகள் அனைவரும் அவர்கள் பேனாவில் போட்டார்கள் எனவே எனக்கு சரியாக நினைவில்லை.

இந்த நீதிமன்றத்தில் எத்தனை பாண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரியும். இந்த வழக்கில் வாதி சொக்கலிங்கத்தின் 2 பாண்டில் நான் கையெழுத்து போட்டேன். 2 வது பாண்டு 05.05.2018 அன்று எழுதப்பட்டது. அது 11.00 மணிக்கு மேல் தான் எழுதப்பட்டது. எத்தனை மணிக்கு முடிக்கப்பட்டது என்றால் ஏறக்குறைய 1 மணிக்குள் முடிந்துவிட்டது.

அந்த பாண்டிலும் பணத்தை வீட்டிலிருந்து தான் கொடுத்தார். அதிலும் கையெழுத்து போட்ட பிறகு தான் பணம் எடுத்து வந்து கொடுத்தாரா என்றால் ஆமாம், பாண்டு எழுதி ரெடி பண்ணி கொடுத்த பிறகு வாதி பணத்தை வீட்டிலிருந்து எடுத்து வந்து கொடுத்தார். அதன் பிறகு அவர் பணத்தை எண்ணி பார்த்தார். எண்ணி பார்த்த பிறகு சரியாக இருக்கிறது என்று ஒப்பு கொண்டு அதன் பிறகு பிரதிவாதி கையெழுத்து போட்டார், நாங்களும் சாட்சி கையெழுத்து போட்டோம், எழுதியவரும் கையெழுத்து போட்டார்.

ரூ–5,00,000 பணம் கொடுக்கப்பட்டது. ரூ.500, 200 ரூபாய் நோட்டுகள். அதன் தனி தனி எண்ணிக்கை தெரியாது. எத்தனை கட்டு என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி 2 பாண்டிலும் என்ன இங்கில் கையெழுத்து போட்டார் என்றால் நினைவில்லை. பிரதிவாதி எந்த மொழியில் கையெழுத்து போட்டார் என்றால் நினைவில்லை. சாட்சி கையெழுத்து போட்டவர்களும் எந்த இங்கில் கையெழுத்து போட்டார்கள் என்றால் அவரவர்கள் பேனாவில் போட்டார்கள், அந்த இங்க் எனக்கு நினைவில்லை.

தியாகராஜன் என்ன இங்கில் கையெழுத்து போட்டார் என்று நினைவில்லை. தியாகராஜன் எந்த இங்கில் கடனுறுதி சீட்டு எழுதினார் என்றால் நினைவில்லை. தியாகராஜன் என்ன மொழியில் கையெழுத்து போட்டார் என்றால் நினைவில்லை. சாட்சி கையெழுத்து போட்டவர் முதலில்

முருகேசன் என்பவரும் 2வது சாட்சி நானும் கையெழுத்து போட்டோம். முருகேசன் என்ன இங்கில் கையெழுத்து போட்டார் என்று நினைவில்லை.என்ன மொழியில் முருகசேன் கையெழுத்து போட்டார் என்றால் தமிழில் கையெழுத்து போட்டார்.

நான் உண்மையில் பாண்டு எழுதியதை பார்த்திருந்தால் எந்த இங்கில் கையெழுத்து போடப்பட்டது என்ற துல்லியமாக சொல்லியிருப்பேன் என்றாலும் நாங்கள் அனைவரும் சேர்ந்து தயாரித்தது என்றாலும் சரியல்ல. இந்த பாண்டிலும் என்ன காரணத்திற்காக கடன் வாங்கினார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் தொழில் ரீதியாக தான் வாங்கினார், ஆனால் அது பாண்டில் குறிப்பிடவில்லை.

இதிலும் அதே தியாகராஜன் தான் பாண்டு எழுதியுள்ளார். அந்த தியாகராஜன், முருகேசன், என்னையும் பிரதிவாதிக்கு யார் என்று தெரியாது என்று சொன்னால் தவறு. பிரதிவாதி எந்த காலத்திலும் 2 பாண்டிற்கும் கையெழுத்து போட என்னை அழைக்கவில்லை என்றாலும் அவ்வாறு அழைத்ததாக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

எங்கள் 3 பேரையும் யார் என்றுதெரியாத பட்சத்தில் அவர் எங்களை அழைக்க வேண்டிய அவசியமில்லை என்றால் தவறு, அந்த கடனுறுதி சீட்டுகள் என்ன பாண்டாக போட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் அது பற்றி சொல்ல முடியாது. நான் கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் பாண்டையும் நான் எடுத்து பார்க்கவில்லை எடுத்து காட்டவில்லை என்றால் சரிதான்.

தாவா பாண்டில் என் கையெழுத்து உள்ளதா இல்லையா என்று தெரியாமல் நான் சாட்சியம் அளிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

பாண்டை பார்ப்பதற்காக மறு விசாரணை செய்ய இயலாது என்று பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது. இருந்தாலும் இதை

வாதத்தின்போது முடிவு செய்து கொள்ளலாம் என்று அனுமதி வழங்கப்படுகிறது.

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 2 முதலாவது கையெழுத்தும் மற்றும் வா.சா.ஆ. 5 ல் இரண்டாவது கையெழுத்து என்னுடையதாகும்.

**மீண்டும் குறுக்கு விசாரணை**

பாண்டை பார்க்காமல் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது பாண்டில் உள்ள கையெழுத்து என்னுடையது என்று சொல்வது தவறான சங்கதி என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் : 05.50 p.m.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2026.02.13 18:05:00 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.